இருபத்தாறாவது அறிக்கையில் (ஏழாவது பேரவை) கண்டுள்ள பரிந்துரைகளின்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி மேற்படி குழுவின் அறுபத்தி மூன்றாவது அறிக்கை.

(2) 1979-80 ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப்பெற்ற மானியங்களிலும் சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளிலும் மிகையாகச் செலவழித்த தொகை பற்றி குழு (1984-85) அளித்த முப்பத்தி இரண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி மேற்படி குழுவின் அறுபத்தி நான்காவது அறிக்கை."

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

திரு. கே. குப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்காணும் அறிக்கைகளை குழுவின் தலைவராகிய நான் இந்தப் பேரவைக்கு அளிக்கின்றேன்:

(1) தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் செயல்முறை குறித்து பொது நிறுவனங்கள் குழு (1983-84) அளித்த நாற்பத்து மூன்றாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின்மீது அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் ஐம்பத்தி எழாவது அறிக்கை.

(2) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1978-79 ஆம் ஆண்டிற்கான (வணிகம்) அறிக்கையின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் (1982-83) முப்பதாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் ஐம்பத்தெட்டாவது அறிக்கை.

(இ) அரசு உறுதிமொழிக் குழு.

திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உறுதிமொழிக் குழுவின் கீழ்க்காணும் அறிக்கையை குழுவின் தலைவராகிய நான் இந்தப் பேரவைக்கு அளிக்கின்றேன்:

1987 நவம்பர் 18]

ஐந்தாவது (எட்டாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை.

அறிக்கையை அச்சிட்டு வழங்குவதற்கு தேவையான அவகாசம் இல்லாத காரணத்தால் ஐந்து நகல்கள் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக சட்டமன்ற நூலகத்தில் வைக்கப் பெற்றுள்ளன. அறிக்கை அச்சிடப்பெற்ற பின்னால் அச்சிடப் பெற்ற பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப் படும்.

(ஈ) மனுக்கள் குழு.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனுக்கள் குழுவின் கீழ்காணும் அறிக்கைகளை குழுவின் தலைவராகிய நான் இந்தப் பேரவைக்கு அளிக்கின்றேன்;

(i) நான்காவது அறிக்கை;

(ii) ஐந்தாவது அறிக்கை.

(உ) பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் கீழ் காணும் அறிக்கையை குழுவின் தலைவராகிய நான் இந்தப் பேரவைக்கு அளிக்கின்றேன் :

நான்காவது அறிக்கை.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 55/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

* 16—11—1987 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS